**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.93/2025 - PW- 4**

| | |
|---|---|
| Name | திரு. ராஜா |
| Husband/Father Name | கனகராஜ் |
| Village /Area | பொன்னை |
| Taluk | காட்பாடி |
| Occupation | நிதி நிறுவன ஊழியர் |
| Age | 30 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 27.10.2025.

**(எதிரி ஆஜர்.).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அசா.1 மற்றும் அசா.2 எனது ஊர்காரர்கள் உறவு முறை தம்பிகள் ஆவார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

13.01.2016 அன்று இரவு நானும், அஜீத் மற்றும் செல்வா ஆகியோர்கள் பாத்ரூம் செல்வதற்காக குளக்கரைக்கு சென்று அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது நாங்கள் இருக்கும் இடத்திற்கு டில்லிராஜ் என்பவர் செல்வா என்பவரை பார்த்து என் என்னை பார்த்து சிரிக்கிறாய் என்று கேட்டதாகவும், அதற்கு செல்வா உன்னை பார்த்து சிரிக்கவில்லை என்று சொன்னதாகவும், அதற்கு எதிரி டில்லிராஜ் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி நீ என்னை பார்த்து தான் சிரித்தாய் என்று செல்வாவின் கண்ணத்தில் அடித்ததாகவும், பக்கத்தில் இருந்த அஜித் டில்லிராஜை முறைத்து பார்த்ததாகவும், அப்போது டில்லிராஜ்

அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அஜித்தின் கண்ணத்தில் அடித்ததாவும், அதற்கு பதில் அஜித்தும் டில்லிராஜ் கண்ணத்தில் அடித்ததாகவும், அதற்கு டில்லிராஜ் என்னையா அடித்துவிட்டாய் என்று சொல்லி தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் மறைத்து வைத்திருந்த ஆபரேஷன் செய்யும் பிளேடை கொண்டு அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அஜித் நெற்றியின் இடது பக்கம், கழுத்தின் இடது பக்கம், இடது மார்பு பக்கம் ஆகிய இடங்களில் அறுத்துவிட்டதாகவும், கழுத்தின் இடது பக்கம் அறுக்கும் போது அஜித் ஒதுங்கவே அந்த பிளேடு இடது பக்க கழுத்தை லேசாக கிழித்து விட்டது என்றும், அஜித் அப்போது ஒதுங்காமல் இருந்திருந்தால் அஜித்தின் கழுத்து நரம்பு கட் ஆகி அவர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்றும், இந்த சண்டையின் போது தடுக்க வந்த பிரபாகரன் என்பவருக்கு வலது கையில் காயம் பட்டதாகவும் காயம் பட்ட அஜித்தை இரு சக்கர வாகனத்தில் கிழே இருந்து விழுந்துவிட்டதாக மருத்துவரிடம் கூறியதாகவும், மேலும் காயம் பட்ட அஜித்தை வேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகாக சேர்த்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு ஆஜர் எதிரி தெரிந்தவர் என்பதால் அவர் காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.27 17:58:37 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.